**03.03.2025**

**அ.வ.எண். 217/2014**

**<u>பி.சா.1 ஜெயினுலாப்தீன் அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**1**. தாவா சொத்து ஆதியில் ஏ.கே.எம். பிச்சை என்பவருக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். மேற்படி ஏ.கே.எம். பிச்சை **1958**ம் வருடம் தாவா சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். **1972**ம் வருடம் மதுராந்தகம் கூட்டுறவு வங்கியில் மேற்படி ஏ.கே.எம். பிச்சை கடன் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஏ.கே.எம். பிச்சை மேற்படி கடனை அடைக்காமல் **15.04.1989** அன்று இறந்துவிட்டார் என்றால் கடனை அடைத்துவிட்டார். சிறிய தொகை மட்டும் நிலுவையில் இருந்தது. நானும் எனது தாயார் ஏ.கே.எம்.பாத்திமா பீவி மட்டும்தான் மேற்படி ஏ.கே.எம். பிச்சை என்பவரின் வாரிசுதாரர்கள் என்று **28.03.2007** அன்று கோவிந்தராஜ் என்பவரை தாவா சொத்திற்கு முகவராக நியமித்தோம் என்றால் சரிதான்.

**2**. நான் தாக்கல் செய்த பிரமாணவாக்குமூலத்தில் கோவிந்தராஜ் என்பவரை தாவா சொத்திற்கு முகவராக நியமிக்கவில்லை என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் நாங்கள் தான் கோவிந்தராஜை முகவராக நியமித்தோம். நான் தாக்கல் செய்த பிரமாணவாக்குமூலத்தில் முகவரை நியமிக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கோவிந்தராஜ் என்பவருக்கு கொடுத்த பொது அதிகார பத்திரத்தினை நான் ரத்து செய்தேனா என்றால் இல்லை. எனது பிரமாணவாக்குமூலத்தில்

பக்கம்2 ல் 2ம் மற்றும் 3ம் வரிகளில் பொது அதிகாரபத்திரம் வாதியால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3. அதற்காக வாதியின் மீது காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. (தற்போது சாட்சி புகார் கொடுத்ததாக மாற்றி சாட்சியம் அளிக்கிறார்). வாதியின் மீது காவல் நிலையத்தில் நான் என்ன புகார் கொடுத்தேன் என்றால் செந்தில்நாதனுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. நான் கோவிந்தராஜ்க்கு எதிராக தான் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் யார் மீது என்ன புகார் கொடுத்தேன் என்றால் கோவிந்தராஜ் மீது எனது மருமகனுக்கு பெயர் மாற்றியதற்காக புகார் கொடுத்தேன்.

4. மேற்படி புகாருக்கு சிஎஸ்ஆர் வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்பட்டது. மேற்படி சிஎஸ்ஆர்யை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் பொது அதிகார பத்திரம் பதிவு செய்யும்போது வாதிக்கும் தாவா சொத்துக்கும் சம்பந்தமும் உரிமையும் இல்லை என்றால் சரிதான். 28.03.2007 தேதியிட்ட பொது அதிகாரப் பத்திரத்தின் அடிப்படையில் மேற்படி கோவிந்தராஜ் 30.04.2007 அன்று மோகன்தாஸ் என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் எனக்கு பணம் கொடுக்கவில்லை. மேற்படி கிரையம் பெற்ற மோகன்தாஸ் என்பவர் எனது தகப்பனார் ஏ.கே.எம்.பிச்சை விட்டு சென்ற கடன் நிலுவை தொகையை23.01.2010 அன்று அடைத்துவிட்டார் என்றால் நான்தான் எனது பணத்தை அவரிடம் கொடுத்து கடனை

அடைத்தேன். எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் அதை எனது தாயார்தான் கொடுத்தார்.

**5**. நான் பணம் கொடுக்கவில்லை என்றாலும் மோகன்தாஸ் என்பவர்தான் கடனை அடைத்தார் என்றாலும் சரியல்ல. நான் கடனை அடைக்காததால்தான் முன்னுக்கு பின் முரணாக பதில் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. **14.09.2010** அன்று வாதி தாவா சொத்தினை கிரையம் வாங்கினார் என்றால் இல்லை. வாதியை இந்த வழக்கிற்கு முன்பு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கோவிந்தராஜ்க்கு நான் பொது அதிகாரம் கொடுத்து **3** வருடங்கள் கழித்து கிரையம் வாங்கினார் என்றால் இல்லை.

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)